0 5

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNP8335– விசேட தேவைகள் சார் கல்வியின் சமூகவியல் அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 16.12.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடைதருக.

பகுதி – **I**

1. "சமூக அடுக்காக்கம்" என்று எதைக் கருதுகின்றீர்கள்?
2. விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு மிகவும் பொருத்தமான பெற்றோரின் பாணியை சுருக்கமாக விளக்குக.
3. எதிர் பாடசாலை கலாசாரத்தின் (Counter school culture) நான்கு (04) அம்சங்களை எழுதுக.
4. சமூகவியலாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ள நான்கு (04) அடுக்குப்படுத்தலின் அடிப்படை அமைப்புக்களை பெயரிடுக.
5. பாடசாலையில் சகாக்களுடன் (Peers) உறவுகளை ஏற்படுத்தவதற்கும் பராமரிப்பதற்கும் விசேட தேவையுடைய குழந்தைகள் எதிர்கொள்ளும் ஐந்து (05) சவால்களை விளக்குக.
6. இலங்கையில் பாடசாலை அமைப்பில் முறைசார் கல்வியைப் பெறுவதில் விசேட தேவைகளையுடைய பிள்ளைகள் எதிர்கொள்ளும் மூன்று (03) பிரச்சினைகளை சுருக்கமாக விவரிக்குக.
7. விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு தற்போது வெகுஜன ஊடகங்களை அணுகுவதற்கு ஐந்து (05) வசதிகளை எழுதுக.
8. விசேட தேவையுடைய குழந்தைகளை கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டில் ஒருங்கிணைப்பதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் ஐந்து (05) பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40** புள்ளிகள்)

பகுதி – **II**

9.

**i.** சமூகமயமாக்கல் என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

**ii.** சமூகமயமாக்கலில் மூன்று (03) இரண்டாம் நிலை முகவர்களைப் பெயரிட்டு அவற்றில் ஒன்றை (01) விளக்குக. (06 புள்ளிகள்)

**iii.** "விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு சமூகமயமாக்கல் ஒரு பெரிய சவாலாக மாறுகிறது." இந்தக் கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

10.

i. விசேட தேவைகளைக் கொண்ட குழந்தைகளை சமூகமயமாக்குவதில் பெற்றோரின் மூன்று (03) முக்கிய பாத்திரங்களை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய பிள்ளைகளை வீட்டில் சமூகமயமாக்கும் போது பெற்றோர் எதிர்கொள்ளும் மூன்று (03) பிரச்சினைகளை எழுதுக.

(06 புள்ளிகள்)

iii. மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளைக் குறைக்க பொருத்தமான முன்மொழிவுகளை பரிந்துரைக்க.

(08 புள்ளிகள்)

11.

i. "சமவயதுக் குழு (peer group)" என்று எதைக் கருதுகிறீர்கள்? (02 புள்ளிகள்)

ii. விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் விருத்தியை அதிகரிக்க சமவயதுக் குழுக்களின் திறனைப் பயன்படுத்த நான்கு (04) உத்திகளை எழுதுக. (08 புள்ளிகள்)

iii. பாடசாலை அமைப்பில் சமவயதுக் குழுவுடன் தொடர்பு கொள்ளும் விசேட தேவை மாணவர்கள் எதிர்கொள்ளும் நான்கு (04) பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

12.

i. பாடசாலையில் விசேட தேவைகள் உள்ள குழந்தையை சமூகமயமாக்குவதில் ஆசிரியரின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை எழுதுக. (06 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய குழந்தைகளை சமூகமயமாக்கும் போது ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் மூன்று (03) சவால்களை விளக்குக. (06 புள்ளிகள்)

iii. மேற்கூறிய சவால்களைச் சமாளிக்கப் பயன்படுத்தக்கூடிய நான்கு (04) பரிந்துரைகளை முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

13.

i. சமூகப் பெயர்வு என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ii. நேர்மறையான சமூக இயக்கத்தை அடைவதில் விசேட தேவைகள் உள்ள குழந்தைகள் தொடர்பான மூன்று (03) பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

iii. விசேட தேவையுடைய குழந்தைகளின் நேர்மறையான சமூக இயக்கத்தை அடைவதில் கல்வியின் மூன்று (03) பாத்திரங்களை பரீட்சிக்க. (12 புள்ளிகள்)

14.

i. விசேட தேவையுடைய குழந்தைகள் மீது வெகுஜன ஊடகத்தின் நேர்மறையான நான்கு (04) தாக்கங்களை எழுதுக.

(04 புள்ளிகள்)

ii. விசேட தேவையுள்ள குழந்தைகளுடன் சமூகமயமாக்குவதற்கு வெகுஜன ஊடகங்கள் பயன்படுத்தப்படலாம் என்பதை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

iii. கல்விச் செயல்பாட்டிற்காக வெகுஜன ஊடகத்தைப் பயன்படுத்துவதனால் விசேட தேவையுள்ள மாணவர்கள் எதிர்கொள்ளும் மூன்று (03) பிரச்சினைகளை விவரிக்குக.

(10 புள்ளிகள்)

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*